ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1791/34 - 2013 ජනවාරි 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.01.03
1791/34 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. 04/03/01/10.
காணி அமைச்சின் குறிப்பு இல. : எல்டீ/05/2010/
டபிள்யூஎஸ்/32.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

சுவீகரிக்கப்படவுள்ள காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், மதுராவல பிரதேச செயலாளர் பிரிவில், 632 பீ கதன தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் கதன கிராமத்தில் அமைந்துள்ள ச. ஐ. கே. வரைபட இல. ஆ. வ. இ. 4367 இல் துண்டு இல. 01 இன் 0.2040 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட 'எல்லமுல்லஹேன' என்னும் காணியின் விபரம்:-

காணியின் பெயர் : எல்லமுல்லஹேன; ஆரம்ப உரிமை கோருபவர்: திருமதி. தம்மி கருணாரத்ன, இல. 05, கோலமுன்ன, பிலியந்தலை ; விஸ்தீரணம்: 0.2040 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி 15 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மதுராவல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

மேனகா பிரியந்த அபேரத்ன,
பிரதேச செயலாளர்,
மதுராவல.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மதுராவல,
2013.01.04.

01-517